கொடுத்ததன் விளைவுதான் இப்பொழுது தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்த்து அங்கே முழுவதும் அந்தத் தண்ணீர் கிடைக்க, பார்சன்ஸ்வாலி திட்டத்தை அங்கேயே பயன்படுத்தி, மாற்றுத் திட்டத்தை வேறு ஒரு இடத்திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து ஒருவகையில் சரியானது. ஆனால், அரசு பார்சன் பள்ளத் தாக்கு திட்டத்தில் நாள் ஒன்றுக்கு 2,275 மில்லியன் லிட்டர் குடிநீர் கொடுக்கிறது, பாதுகாப்பு நிறுவனத்திற்குத்தான் எனவே, பாதுகாப்பு நிறுவனத்திற்குத் தண்ணீர் கொடுக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்கள் என்று கருதவில்லை. ஆனால், நீர் கொடுக்கும் திட்டத்தை மேலும் மேம்படுத்த வேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையாகும். அதை இந்த அரசு கவனிக்கிறது. மேம்பாடு திட்டத்தைப் பற்றி பரிசீலனை செய்கிறது, ஆவன செய்யப்படும்.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு படையினருக்குத் தண்ணீர் கொடுப்பதில் யாருக்கும் ஆட்சேபனை கிடையாது. ஆனால், அதற்குத் தனி திட்டம் தயாரித்து, உதகை மக்கள் குடிதண்ணீருக்குப் படும் அவஸ்தையை நீக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது ஏற்கனவே கேட்கப்பட்ட கேள்வி. இதற்கான பதிலும் ஏற்கனவே சொல்லி விட்டேன்.

TRUTH ALONE TRIUMPHS

சென்னம்பட்டியில் தீர்த்தேக்கம் கட்டும் திட்டம்.

* வினா எண். 333—திரு. எம். பிச்சை : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் அருப்புக்கோட்டை தொகுதி சென்னம்பட்டி என்னும் இடத்தில் நீர்த்தேக்கம் கட்டி குண்டாற்றின் இரு கரைகளிலும் கால்வாய் ஏற்படுத்தி பாசன வசதி பெற அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எப்பொழுது துவங்கப்படும்

[1982 மார்ச் 3]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ), (ஆ) : மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், சென்னம்பட்டி கிராமத்தின் அருகே மேல்குண்டார் என்னும் கௌண்டன் நதிக்கு குறுக்கே ஒரு அணைக்கட்டுவதற்கான திட்ட அறிக்கை தலைமைப் பொறியாளர் (ஆய்வு)-ன் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9.50)

திரு. எம். பிச்சை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே உள்ள சென்னம்பட்டி என்னும் இடத்தில் ஒரு அணையைக் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த சென்னம்பட்டி அணைக்கட்டு கட்டுவதால் அதற்குக் கீழே உள்ள என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பல கண்மாய்கள்—ஏறத்தாழ 20 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறுகிற அளவுக்கு இருக்கின்றன. அந்தத் தண்ணீர் முழுவதும் மழை வெள்ளம் வருகின்றபோது அந்த குண்டாற்றின் வழியாக தண்ணீர் கடலிலே கலந்து வீணாகிக் கொண்டு போவதைத் தடுக்கின்ற வகையில் இருபுறமும் சிறு நீர்த் தேக்கத்தைக் கட்டி, அந்தப் பகுதி மக்களுக்கு உதவ அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது ; தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக இராமநாதபுரம் வட்டம், அருப்புக்கோட்டை வட்டம் மற்றும் மதுரையில் திருமங்கலத்தில் உள்ள 21 கண்மாய்களுக்கு பாசன வசதி கொடுப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருப்பதாக அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது குறித்து இந்த அரசு இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கின்றது.

TRUTH ALONE TRIUMPHS

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, குண்டாற்றின் மூலம் முதுகுளத்தூர், கமுதி, இராமநாதபுரம், திருப்புளானி ஆகிய பகுதிகள் பாசன வசதி பெற்று வருகின்றன. உற்பத்தியாகும் இடத்திலே ஒரு அணையைக் கட்டி தடுத்தால், முதுகுளத்தூர் பகுதி மக்களுக்கும், கமுதிப் பகுதி மக்களுக்கும் தண்ணீர் கிடைக்காமல் செய்கின்ற பெரும் துரோகமாக ஆகிவிடும். அவர்கள் விவசாயத்தையே கைவிட்டு ஓட வேண்டிய அவசியம் ஏற்படும். எனவே அரசு இந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்து கைவிட நடவடிக்கை எடுக்குமா ?

மாண்மிகு பேரவைத் தலைவர் : ஒரு தொகுதியில் அணை கட்டவேண்டும் என்றும், இன்னொரு தொகுதியில் அந்த அணையைக் கட்டக்கூடாது என்றும் சொல்லுகிறார்கள்.

1982 மார்ச் 3

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் சென்னம்பட்டி என்னும் இடத்தில் அணைக் கட்டுவதன் காரணமாக, மாண்புமிகு உறுப்பினர் சத்தியமூர்த்தி அவர்கள் சொல்லக் கூடிய அந்த மலட்டாறு திட்டம் பாதிக்கப்படாது. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் பிச்சை அவர்கள் குறிப்பிட்டதைப் போல இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதன் மூலமாக அவர்கள் கருதுகிறபடி 20 ஆயிரம் ஏக்கர் அருப்புக்கோட்டைக்கோ திருமங்கலம் பகுதிக்கோ பயன் அடையப்போவதில்லை. 21 கண்மாய்களுக்குத் தண்ணீர் கொடுத்து 1,205·10 ஏக்கர் நிலத்திற்குத்தான் பாசன உறுதியை நாம் தருகிறோம். 171·41 ஏக்கர் நிலத்திற்கு பாசன பற்றாக் குறையைப் போக்கவும் 995·4 ஏக்கர் புதிய நிலம் பாசன வசதி பெறுவதற்கு திருமங்கலம் வட்டம் அருப்புக்கோட்டை வட்டத் திற்கும் கொடுத்து, எஞ்சியுள்ள நீரை மலட்டாறுக்குத் திருப்ப முடியும் என்று ஓரளவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இருந்தாலும், 3 தொகுதிகளும் பாதிக்கப்படாத அளவுக்கு அரசு கவனமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதியிலே சென்னம்பட்டி அருகில் கட்டப்படுகின்ற அணை சீப் இன்ஜீனியர் அவர்களின் ஆய்விலே இருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டம் எப்போது அரசுக்கு வந்தது ? ஏன் இவ்வளவு காலம் தாமதம் ஆயிற்று ? பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு வரப்பிரசாதமாக அமையக்கூடிய இந்த அணை எப்போது கட்டப்படும், எப்போது இந்தத் திட்டம் தொடங்கப்படும் என்பதை இந்த மன்றத்தின் மூலமாக அந்தப் பகுதி மக்களுக்கு அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 6-வது ஐந்தண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்ற திட்டங்கள் என்கின்ற வரிசையில் இந்தத் திட்டமும் இடம் பெற்று வருகின்றது. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து, மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது இதற்காக 170 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருப்பதையும் இந்த அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சத்தியமூர்த்தி அவர்கள் தெரிவித்த அந்த அச்சத்தையும் கவனத்தில் கொண்டு அங்கே எவ்வளவு நீரை நாம் தேக்குகிறோம். கூடுதலாக எவ்வளவு நீர் அங்கே வழங்கப்படுகின்றது என்பதைத் தான் திரும்பவும் ஒரு ஆய்வு செய்திருக்கிறோம். எனக்கு கிடைத்த முதல் நிலை அறிக்கையின் தகவல்படி 3 தொகுதிகளும் பாதிக்கப்படாது. திட்டமிட்டபடி இதை எடுத்து நடத்த வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS